பொதுப் பணிக்குப் போதிய பணமில்லை?

Regd: No. M. 5458 Phone No. 4502:

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி [illegible])

மாலை 2 | சென்னை 18—12—50 | மணி 16

பொது மக்கள் உதவ வேண்டுமாம்

—(0)—

மதத்தின்பேரால் உள்ளபணம் யாருக்குத்தான் பயன்படுமோ

'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே, என்று கூறிய பெரியார்கள் வாழ்ந்த நாடு இந்த நாடு. தன்னையே பொதுப் பணிக்கு ஆளாக்கிக்கொள்ள முனைவோர் நிறைந்த நாடு நம் நாடு.

பொதுப் பணி நடைபெறும் எனும் நோக்கத்துடன்தான் மடங்களுக்கும் கோவில்களுக்கும் செல்வர்கள் ஏராளமான சொத்துக்களை விட்டுச் சென்றனர்.

இன்று கோவில்களிலும், மடங்களிலும் ஏராளமான செல்வம் குவிந்திருக்கின்றது. அச்செல்வத்தைக் கொண்டு மக்கள் நன்மைக்குரிய செயல்கள் பலவற்றைச் செய்து முடிக்கலாம்.

கோவில், மடச் செல்வங்கள் கோவிலிலும் மடங்களிலும் விளக்கேற்றவும், விழாச் செய்யவும் மட்டுமே என்றெண்ணுவதும் ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்களைத் துவக்கிவிடுவதுடன் வேலை முடிந்ததென்றெண்ணுவதும் அறிநெறியன்று. விளக்கேற்றி, விழாச் செய்து மீதமாகும் பணத்தைப் பொதுப்பணிக்குப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் கடமை.

இன்று நம்நாட்டில் கோவில்கள், மடங்கள் போல் உள்ள சொத்து ஏராளம். அவற்றினைப் பொது நலப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை விவாதித்துக்கொண்டிருப்பதில் காலங்கடத்தும் அரசாங்கம், வேறு வழியிலெல்லாம் கட்சிச் செல்வாக்கைப் பயன்படுத்துகையில், இதற்கெனக் கட்சிச் செல்வாக்கைப் பயன்படுத்தி, மதத்தின் பேரால் உள்ள செல்வம் முழுவதும் மக்கள் பணிக்கே பயன்பட வேண்டுமென்று சட்டம் செய்வதற்கு நெடுநாட்கள் தேவையில்லையே. மேலே குறிப்பிட்ட பெரியார் கூற்றே அரசாங்கத்தார் கண்களைத் திறக்கப் போதுமானதாக இருக்கிறதே.

ஆனால் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. நாட்டிலே க்ஷயரோகம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது. 1937-ல் 12 கட்டில்களுடன் துவக்கப்பட்ட தாம்பரம் க்ஷயரோக ஆஸ்பத்திரி 13 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றுங்கூட 400 படுக்கைகளுடன் கூடியதாகத்தான் வளர்ந்திருக்கிறது.

நாட்டிலே க்ஷயரோகம் பலவகையாக மக்களிடைப் பெருகியிருக்கிறது. கடந்த ஓர் ஆண்டில் மட்டும் 7146 பேர் முனிசிபல் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் மட்டும் மாண்டிருக்கின்றனர். இது கணக்குக்கு வந்த வரையில் உள்ள அளவு. ஆனால் கணக்கில் வாராமல் கிராமப் பகுதிகளிலும் மற்றவிடங்களிலும் மாண்டிருப்போர் எவ்வளவு பேர்?

இந்த 400 படுக்கைகள் தாம்பரம் ஆஸ்பத்திரியில் ஏற்படப் பொது மக்களும், இராணுவ வீரர்களும் உதவ வேண்டியிருந்தது.

க்ஷயரோகச் சிகிச்சை நிலையங்களில் இப்போது ஏழை மக்கள் இடம்பெற முடியவில்லை. பொதுவாக, ஏழைகள் தக்கவாறு கவனிக்கப்படுவதில்லை என்ற எண்ணம் பொது மக்களிடையே பரவியிருக்கிறது.

அரசாங்கம், இத்துறையில் தக்கவாறு வேலை செய்வதென்றால், ஜில்லாவுக்கு நான்கைந்து க்ஷயரோக ஆஸ்பத்திரிகளையாவது ஏற்படுத்த முன்வர வேண்டும். பொறுப்புள்ள மருத்துவர்களை அவற்றில் நியமித்து, மக்களுக்குப் பரிகாரம் செய்ய முனைதல் வேண்டும். இதற்குப் பெருஞ் செலவாகுமே 'பணமில்லையே' பொது மக்களே பணம் உதவி செய்யுங்கள் என்று அமைச்சர்கள் ஓலமிடுவதை விட்டு, மத ஸ்தாபனங்களிலிருக்கும் அதிகப்படியான செல்வத்தை இதற்கென ஈடுபடுத்த வேண்டும்.

க்ஷயரோகம் வாராதபடி தடுக்கும் முறைகளையும் அரசாங்கம் கைக்கொள்ளவேண்டும். மக்கள் கூட்டம் கூட்டமாக நெருங்கிக் குடியிருப்பதைச் சட்ட விரோதமாக்கி விடவேண்டும். ஒரே வீட்டில் பத்துப் பதினைந்து குடிகள் என ஒரு வீட்டிற்குள் நூறு பேருக்கு மேல் அடைந்துவாழும் வீடுகள் சென்னை நகரிலே பல இருக்கின்றன. இவ்வாறிருப்பதைத் தடைசெய்யவேண்டும்.

இத்தனை பேர் வசிக்க இவ்வளவு இடம் இருக்கவேண்டும் என்ற கணக்கிட்டு, அதன்படி குடியிருப்பு முறைஏற்படுத்தவேண்டும். அசுத்தமான வீடுகள், இடிந்த வீடுகள் முதலியவற்றின் சொந்தக்காரர்கள் தண்டிக்கப்படுவதற்கான நடைமுறை அரசாங்கத்திலிருந்தால் வீட்டுச் சொந்தக்காரர்கள் பாழடைந்த நிலையில் பணம் வந்தால் போதுமென வீடுகளை இருட்டுக் குகைகளாக்கி வைத்திருக்க மாட்டார்கள். பண

(4-ம் பக்கம் பார்க்க)

வேலை செய்ய நூலில்லை

—(0)—

பிச்சைபோட ஆளில்லை உயிர்வாழ மனமில்லை

—(0)—

நாட்டிலே நலிவுதரும் செய்தி

நெல்லை மாவட்டம், சங்கரநயினார் கோவிலில் சுப்பையா என்னும் நெசவாளர் 6-12-50ல் தற்கொலை செய்துகொண்டார். இது நமக்குக் கிடைத்த செய்தி. இதைப்போன்று எத்தனைபேர் தெரியாமல் மாண்டனரோ அல்லது தற்கொலை புரிந்து கொள்ளும் எண்ணத்துடன் வேதனையடைகின்றனரோ நாமறியோம் நாட்டிலே நடக்கிறது இப்படி. மக்கள் ஆட்சி நடத்தும் நாட்டிலே வேதனைப்படும் செய்தி. வெட்டிப் பேச்சுப் பேசித் திரியும் காங்கிரஸ் தோழர் மனம் நடுங்கும் செய்தி. அவர்கள் காண்கிறார்களா சுப்பையாவைப்போன்று "நூலில்லை, வேலையில்லை. பசிதாங்க முடியவில்லை, பிச்சைபோடும் ஆளில்லை. மானம் காக்க முடியவில்லை. உயிர் வாழமனமில்லை" என்று சொல்லித் தற்கொலை புரிந்துகொண்டவர்களின் நிலையை? இப்படி இறப்பவர்களின் குரல் அவர்களுக்குக் கேட்காது.

சுப்பையாபோன்று உயிர்விட நினைத்துக்கொண்டிருப்பவர் எத்தனை பேர்களோ? நாமறியோம். "நலிவடைந்த நாட்டாட்சியைமேற்கொள்ள நாங்கள்தான் தகுந்தவர்கள். ஆட்சிமேற்கொள்ளும் சில ஆண்டுக்குள் அரசு தழைத்திடும். அதில் மக்கள் வாழ்க்கை மலர்ந்திடும்" என்றெல்லாம்கூறினார்களே! இன்பவாழ்க்கை அடைந்ததைப் போன்று கண்மூடி வரவேற்றோமே, அதற்குப் பரிசு மனம் வேதனை அடையும் செய்தி. எதிர்காலத்தை நினைத்து நடுங்கும் நிலை நமக்கு; ஆனால் நாட்டிலே நடப்பதைக்காங்கிரஸ்காரர்கள் காண்கிறார்களா? அல்லது மக்கள் படும் வேதனை, ஜார்மன்னன் கண்களுக்குத் தோன்றியதைப்போல் காட்சியளிக்கிறதோ. இது நன்மைக்கல்ல.

இந்தப்போக்கு மேனாட்டிலே வளர்ந்ததால் ஏற்பட்ட சரித்திர மாறுதல்களைக் கண்டோம். நம்நாட்டின் பிற்காலச் சரித்திரத்தில்இடம் பெற முடியாதவகையில் நடந்து கொள்ளட்டும்.

தென்காசியில் பட்டினி ஊர்வலம்

தென்காசி 10-12-50 அன்று புதுமனை ஹமீதியா மைதானத்திலிருந்து சுமார் 5000 கைத்தறி நெசவாளர்களும் பொதுமக்களும் கூடி, தோழர் நா. சங்கரன் அவர்கள் தலைமையில் பட்டினி ஊர்வலம் பகல் 2 மணிக்கு ஆரம்பித்து மெயின்பஜார் வழியாக உழைப்பாளியின் துயரைப்போக்க நூலைக்கொடு. பாட்டாளியின் பசியைப் போக்க உணவைக்கொடு என்ற கோஷங்களிட்டுகொண்டு தாலூகா அதிகாரி தோழர் தாசில்தார் அவர்களிடம் போய் ரேஷன் குறைகளையும் நூல் சப்ளை சரிவர கிடைக்கவில்லை என்பதையும் விளக்கி மகஜர் சமர்பிக்கப்பட்டது தோழர் தாசில்தார் அவர்கள்கூடிய சீக்கிரத்தில் வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகஉறுதிகூறினார்ஊர்வலம்அமைதியாக தாலுகாடெக்ஸ்டைல் இன்ஸ்பெக்டர் அவர்களின் ஆபிசிற்கு புறப்பட்டு இன்ஸ்பெக்டரிடம் மகஜர் சமர்பித்தபின் ஊர்வலம் அமைதியாக அனுப்புமண்டபம் வந்தடைந்து மாலை 5 மணிக்குத் தோழர் நா. சங்கரன் அவர்கள் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் மா. வேத ஆறுமுகம், எஸ். எம். மைதீன்பக்ஷ், பி. கே. சாமி, கு.நா. சண்முகம், எ. எம். செய்யதுசுலைமான் ஆகியவர்கள் நெசவாளர்களுக்கு நூல் சரியாகக்கிடைக்காததைப் பற்றியும் ரேஷன் குறைவாக கிடைப்பதைப் பற்றியும் பேசியபின் கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

லண்டன், டிச. 17—

ஒரு பெரிய விமானம் இருக்கிறது. அதில் ஓட்டுவதற்கான சகல மெக்கானிஸமும் இருக்கின்றன, ஆனால் இந்த விமானம் மட்டும் பறக்காது, இதில் பயிற்சி பெறுவது சுலபமாம்.

மாலைமணி

சென்னை 18—12—50 திங்கட்கிழமை

கையில் பணம் இல்லை

தென்னாட்டிலே ஆறுகள் பல பாய்கின்றன, அவை வெள்ளமோடுங் காலத்தில் ஓடிக் கடலில் கலந்துவிட்டால், பின்னர்க் காய்ந்த தரையாகக் காட்சியளிக்கும் நிலையில் இருக்கின்றன. நாட்டிலே மக்களுக்குப் போதுமான அளவு உணவுப் பொருள்களைப் பயிரிட்டுக்கொள்ள வேண்டுமானால், இந்த ஆறுகளின் வெள்ளம் கடலில் கலந்துவிடாதபடி தடுத்துத் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கால்கள் வெட்டி அவற்றின் மூலம் பல நிலங்களை விளையச் செய்யலாம்.

இதற்கான திட்டங்கள் சில காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே வகுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்றுதான் மேட்டூர் அணை. அது போன்று இன்னும் பல அணைகள் போடப்பட்டுத் தண்ணீர் தேக்கம் பெருவாரியாக ஏற்பட்டால்தான், நம் நாட்டு விளை பொருள்கள் நம்மவர்க்குப் போதுமான அளவில் ஆக முடியும். ஆனால் காங்கிரஸ்காரர்கள் பஞ்சத்தைத் துணையாகக் கூட்டிக்கொண்டு ஆட்சி பீடத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்கள் என்று கூறும்வாறு நிலைமையிருக்கிறதே ஒழிய, இத்தகைய நல்ல திட்டங்களை விரைவில் நடைமுறையில் கொண்டுவர வேண்டும் என்ற துடிதுடிப்பு காங்கிரஸ் அமைச்சர் தோழர்களிடை இருப்பதாகத் தெரியவில்லை.

நம் நாட்டிலே இப்போது திட்டமிடப்பட்டுள்ள சில நீர்ப்பாசனத் திட்டங்கள் வரையில் கட்டிமுடிப்பதென்றால் ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவாகும் என்று அரசாங்கத்தினரால் மதிப்படப்பட்டிருக்கிறது. இதற்கும் நம் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தின் உத்தரவு பெற வேண்டும். எதற்கு? அவர்கள் பணம் தருவார்கள் என்றா? அல்லது உலக பாங்கில் வாங்கியுள்ள கடனில் நம் நாட்டிற்கு ஒரு கோடி ரூபாய் கடன் கொடுத்து இந்தச் சில்லறை நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பார்கள் என்றா? இவை ஒன்றுமில்லை. ஒரு வேளை நம்மவர்களிடம் பணம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அல்லது மீதிச் செலவினங்களைக் கட்டுப்படுத்தி இதற்காக ஒரு கோடி ரூபாயைச் செலவிடச் சென்னை அரசாங்கம் முன் வருவதென்றால்கூட இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை நம் நாட்டில், நம் பணச் செலவில் கட்டிக்கொள்வதற்கும் மத்திய அரசாங்கத்திடம் நாம்அனுமதி பெற்றாகவேண்டும். இதில்தான் நமக்கும் வட நாட்டுக்கும் தொடர்பு மிக அவசியமாக இருக்கிறதேயொழிய, நமக்குப் பண உதவி செய்து நம் நாட்டை வளப்படுத்துவதற்கன்று. நாட்டின் பெயரால் வாங்கிய கடன் தொகைகளில் தென்னாட்டிற்கு அளிக்கப்பட்டது எவ்வளவு தொகை? அத்தொகை எவ்வாறு தென்னாட்டு வளத்தைப் பெருக்கப் பயன் பட்டிருக்கிறது என்பதையும் பொது மக்கள் அறிய முடியவில்லை,

வைகை ஆற்று நீர்ப்பாசனத்திட்டத்துக்காகத்தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தை அமைச்சர்கள் பார்வையிட்டபோது, அதைக் கட்டி முடிப்பதற்குரிய அனுமதி இன்னும் வரவில்லையென்று தெரிவித்தார்கள் இந்த வைகை யாற்றுத் திட்டம் கட்டி முடிய இரண்டு கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலக்கிழவர்கள் இச் செலவைத் தாங்கள் பங்கிட்டுப் பணம் கொடுத்து உதவி செய்வதாகவும் விரைவில் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மத்திய அரசாங்கத்தின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை, எப்படி யிருக்கிறது நம் நிலைமை!

இத் திட்டம் கிடக்க, மற்றச் சில்லறைத் திட்டங்கள் நிறைவேற்றத் தேவைப்படும் ஒரு கோடி ரூபாயையும் அவ்வப் பகுதி நிலக்கிழவர்கள் கொடுத்துதவ முன் வந்தால் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய அனுமதியும் விரைவில் கிடைத்துவிடுமென்றும், அரசாங்கப் பொக்கிஷத்தைப் பாதிப்பதாயிருந்தால்தான் அனுமதி கிடைப்பது கஷ்டமென்றும் அமைச்சர் கூறினார்.

பணம் பணம் என்று பொது மக்கள் உயிரை வாங்குவதைவிடக் கோவில்களிலும், மடங்களிலும் முடங்கிக் கிடக்கும் செல்வத்தை நாட்டு வளத்துக்குரிய இந்த நல்ல காரியத்தில் பயன்படுத்தச் சென்னை அரசாங்கம் ஏன் முயலக்கூடாது? அந்தப்பணத்தைக் கொண்டு, பாலாற்றுத் தண்ணீரை அணைகட்டித் தேக்குவது வரை, நம் நாட்டு ஆறுகளின் தண்ணீர் அனைத்தையும் தேக்கிவிடலாமே, இதனால் உழவுத் தொழிலும் பெருகி மின்சாரமும் மிகுந்து நாடு நல்ல முறையில் வளம் பெறுமே. அரசாங்கம் கவனிக்குமா?

மூன்றாவது உலகப் போர் மூளும்

—(o)—

வல்லரசுகளின் ஆதிக்க வெறி தணியவில்லை

—(:0:)—

ரஷ்யாமீது அமெரிக்காவின் பழி

கொரியாவில் வடகொரியப்படைகள் மேலும் முன்னேறி, எல்லைக் கோட்டைத் தாண்டி முன்னேறிவிட்டன. தென் கொரியாவில் சில இடங்களை இப்படைகள் கைப்பற்றிக்கொண்டனவென்றும், ஐ. நா. படைகள் பின்வாங்கிவிட்டனவென்றும் தெரிகிறது.

எனவே, கொரியாவில் ரஷ்யத் தலையீடு மிகுந்துவிட்டதென்றும் சீனக் கம்யூனிஸப் படைகளே கொரியாவில் போரிடுவதாகவும் அமெரிக்காவின் பலத்தை ரஷியா கொரியாவில் சோதனையிடுகிறதென்றும், கொரியாமூலம் உலகப்போர் துவக்க ரஷ்யா முயற்சிக்கிறதென்றும், அமெரிக்காவின் நிலை பேராபத்திலிருக்கிறதென்றும் கூறி, போர் ஆயத்தத்துக்கு அமெரிக்காவின் தலைவர் ஏற்பாடு செய்கிறார்.

காலாட்படையின் தொகையை 35 லட்சமாகப் பெருக்க அமெரிக்கத் தலைவர் திட்டமிட்டுவிட்டார். ஓராண்டுக்குள் விமானப்படை இப்போதிருப்பதிலும் 5 மடங்கு அதிகப்படுத்தப்படுமாம். போர் இயந்திரங்கள் 4 மடங்கு அதிகமாக்கப்படுமாம். விலைக்கட்டுப்பாடுகள் கூலி நிர்ணயங்கள் முதலியவற்றையும் விரைவில் வெளியிடப்போவதாகவும், நாடு அபாயநிலையிலிருப்பதாகவும் அமெரிக்கத் தலைவர் அறிவிக்கிறார்.

பொதுவாக, கொரியாச்சண்டை உள்நாட்டுச் சண்டையாகும். அதில் தலையிட எந்த வெளிநாட்டுப் படைக்கும் உரிமையில்லை ஆனால் அங்கு அமெரிக்கப்படைகளுடன், ஐ. நா. படைகளுமிருக்கின்றன. எதிர்தரப்பில் சீனாவில் வெற்றி பெற்ற சீனக் கம்யூனிசப் படைகள் வடகொரியரை ஆதரித்துப் போர்க்களம் வந்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்வாறு கொரியாவைக் காரணமாகவைத்து இந்த வல்லரசுகள் ஆதிக்க வெறியைத் தணித்துக் கொள்ள மூன்றாவது உலகப் போரைத் துவக்கிவிடுமென்று அறியக்கிடக்கிறது.

அணுகுண்டு போன்ற பயங்கரக் கருவிகள் வைத்திருப்பதால் இந்த வல்லரசுகள் போரை ஒரு பிள்ளை விளையாட்டாகக் கருதிக்கொண்டிருக்கின்றனவென்றே கருதவேண்டியிருக்கிறது.

செஞ்சீனாவின் இராணுவம்

செஞ்சீனாவின் இராணுவம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருவதாகவும் நாட்டின் பொருளாதார வசதிகள் பெரும்பாலும் இராணுவ உபயோகத்திற்கே போவதாகவும் இங்கு தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இப்போது சீன இராணுவத்தில் 50,00,000 பேர் இருந்து வருகின்றனர். விமான நிலையங்களும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

வட சீனாவில் ரஷ்யர் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. என்றும் மஞ்சூரியாவின் நிர்வாகம் ரஷ்யாவிடமே இருப்பதாகக் கூறலாம் என்றும் கூறப்படுகிறது.

பிரிட்டனுக்கு அமெரிக்க துருப்புகள்

லண்டன், டிச. 17—

பீரங்கி எதிர்ப்புப்பட்டாளங்கள் மூன்று சீக்கிரமே பிரிட்டன் வந்து சேரும் எனத் தெரிகிறது இதைத் தொடர்ந்து மேலும் அமெரிக்கத் துருப்புகள் வரலாமெனக் கூறப்படுகிறது.

மலேயாவில் காகித உற்பத்தி

கோலாலம்பூர், டிச. 17—

மலேயாவில் காகித உற்பத்திக்கான ஆராய்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன. ஸெலாங்கரில் மா ஆராய்ச்சி லாபரேட்டரிகள் இதற்காக ஏற்படவிருக்கின்றன.

கம்யூனிஸத்தை எதிர்க்க ஐக்கய முன்னணி

டமாஸ்கஸ், டிச. 17—

கம்யூனிஸத்தை முழு மூச்சுடன் எதிர்க்க அரபுகள் ஐக்கிய முன்னணி அமைத்து வருவதாகவும், எகிப்திய பாதுகாப்பிலாகாவைச் சேர்ந்த அரபு விவகாரப் பிரிவு தலைவர் கர்னல் முகம்மது யூசுப்பே இதற்கான முயற்சிகளை எடுத்தது வெற்றி பெற்றுவருகிறதென்றும் இங்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

"அரபு தியாகிகள் சங்கம்" என்கிற பயங்கர சங்கத்தின் நடவடிக்கைகளை ஒடுக்குவது சம்பந்தமாக இவர் ஸிரிய அதிகாரிகளைச் சந்தித்து பேசியிருக்கிறார்,

மத்ய கிழக்கில் கம்யூனிஸ்டுகள் போடும் எத்திட்டமும் நிறைவேறவிடாது தடுக்க வேண்டும் என்பதே அரபு முன்னணியின் நோக்கமாகும்.

அரபு அகதிகள் நிவாரணம்

பாலஸ்தீன அரபு அகதிகளுக்கு ஐ. நா. நிவாரண உதவி 1952-ம் ஆண்டு வரை நீடிக்கும் என்று தெரிகிறது. முன்பு செய்த முடிவுப்படி இந்த உதவியை 1951-ல் நிறுத்திவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பின்னர்த் தான் நீடிக்க முடிவு செய்யப்பட்டது.

கண்ணீரால் எழுதப்பட்டது

திராவிட மன்னர்கள்

தருமாஜன்போல் நாட்டைச் சூதாட்டத்தில் தோற்றதில்லை.

அரிச்சந்திரன் போல் நாட்டை முனிவருக்குத் தானம் செய்ததில்லை

திராவிடக் கவிஞர்கள்

அதல சுதல பாதாளமென அண்டப் புளுகு எழுதவில்லை.

கண்ட கண்ட உருவெடுத்தார் கடவுள் எனக் கதை தீட்டவில்லை.

காலடியில் புரண்டு தொழுதால் கடாட்சம் என்று கூறவில்லை.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்றனர்.

திராவிடர்

உயிர்வாழ, மானத்தை இழந்ததில்லை.

உறுதியின்றி உலுத்தராய் இருந்ததில்லை.

சூது சூட்சியை ஆயுதமாகக் கொண்டதில்லை.

சுதந்திர வாழ்வுக்காக உயிரையும் தந்தனர்.

திராவிடம்

அன்னிய ஆட்சிக்கு அடிமைப் பட்டிருக்கவில்லை.

பஞ்சமும் பிணியும் பதைப்பும் கண்டதில்லை

பாட்டாளி பதைக்கப் பார்த்துச் சகித்ததில்லை.

உழைப்பால் உயர்ந்து உரிய இடம் பெற்றது உலகில்.

திராவிடம் இன்று

திராவிட மன்னர்கள் மறைந்தனர்- மக்கள் பண்பை மறந்தனர். வீரம் கருகிவிட்டது! வீணருக்கு ஆதிக்கம் ஏற்பட்டது.

திராவிடக் கலைக்கும் மொழிகட்கும் மதிப்பு இல்லை.

திராவிடத் தொழில் வளம் தூங்குகிறது. திராவிடன் தேய்புகிறான்.

திராவிடச் செல்வம், கோயிலில் கொடி மரத்தில், கொட்டு முழக்கில், வெட்டி வேலையில், வெளி நாட்டில் சென்று முடங்கிவிட்டது.

திராவிடன் தேயிலை கரும்பு ரப்பர் தோட்டக் காடுகளில் கூலியாய் வதைகிறான்.

திராவிட நாட்டிலே, மூலைமுடுக்குகளிலெல்லாம், மார்வாடிக்கடைகள்; குஜாராத்திகளின் கிடங்குகள்; முல்தானியின் முகாம்கள், சேட்களின் கம்பெனிகள்.

பெரிய வியாபாரங்களெல்லாம் வட நாட்டாரிடம்.

தொழிற்சாலைகளிலே, துரைமார்கள் இல்லை—பனியாக்கள்.

டால்மியாவுக்கு, திருச்சிக்குப் பக்கத்திலே நகரமே இருக்கிறது.

ஆவூர் சேட்களுக்கு, திருப்பூர் கோவை வட்டாரத்தில் ஆலை அரசர்கள் எல்லாம் கட்டியம் கூற வேண்டிய நிலைமை.

சென்னையிலே, சௌக்கார் பேட்டை இருக்கிறது-பாரத்பாங்க் இருக்கிறது.

தினம் ஒலிக்கும் மணி, ஒருவட நாட்டு கோயங்கா உடையது. சென்னையில் பெரிய கட்டிடங்கள் இன்று வட நாட்டாருக்குச் சொந்தம்!

இங்கிலையில் உள்ள திராவிடத்திலே ஆடை முதல் ஆணி வரை வட நாட்டிலிருந்து வருகிறது வருகிறது என்னும்போது, ஏராளமான பணம் இங்கிருந்து வட நாட்டுக்குப் போகிறது என்று பொருள்.

வளம் இழந்து, இருக்கும் கொஞ்ச நஞ்சம் வளத்தையும் வட நாட்டுக்குக் கொட்டி அழுதுவிட்டு வறுமைப் பிணியுடன் வாடும் திராவிடம், தலை தூக்க, அதன் மக்களுக்கு முழுவாழ்வுகிடைக்க வெளி நாடுகளுக்குக் கூலிகளாகச் சென்றுள்ளவர்கள் திரும்பி வர, வாழ்க்கைத் தரம் உயர, திராவிட நாடு திராவிடருக்கு என்ற நமது திட்டம் தவிர வேறு திட்டம் இல்லை!

பொருளாதாரத்தையே அடிப்படையில் கொண்ட இப்பிரச்னையை, வெறும் கட்சிக் கண்களுடன் நோக்காமல், நாட்டுப்பற்று நிரம்பிய கண்கொண்டு காணும்படி, திராவிடர் கழகத்தைச்-சாராதாரணை வரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தலையிலே, 'பிரி பிரியாக'வர்ணத் துணியைச் சுற்றிக்கொண்டு, போர் போராக உள்ள சாமான்களின் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு வட்டிக் கணக்கைப் பார்த்துக் கொண்டே, வயிற்றைத் தடவிக் கொண்டுள்ள மார்வாரியையும் பாருங்கள், பாரம் நிறைந்த வண்டியை, மாட்டுக்குப் பதிலாக இழுத்துச் செல்லும் தமிழனையும் பாருங்கள்! மெருகு கலையாத மோட்டாரில் பவனி வரும் சேட்டுகளையும் பாருங்கள், கூலி வேலைக்கு வெளி நாடு செல்ல, கிழிந்த வறண்ட தலையும் ஒளியிழந்தகண்களுங்கொண்ட தமிழன், கப்பல் டிக்கட்டுக்குக்காத்துக் கொண்டிருக்கும் காட்சியையும் காணுங்கள். இங்கே பச்சைப் பசேலென்று உள்ள கஞ்சை புஞ்சையையும் பாருங்கள், அதே போது நடக்கவும் சக்தியற்று, பசியால் மெலிந்துள்ள தமிழர்களையும் பாருங்கள்-எங்களை மறந்து இந்தக் காட்சிகளைக் காணுங்கள்-நாங்கள் கூறுகிறோம் ஒரு திட்டம் என்பதைக் கூட மறந்து—நீங்களாக யோசித்து ஒரு திட்டம் கூறுங்கள். பண்டைப் பெருமையுடன் இருந்த ஒரு நாடு, பல்வேறு வளங்கள் நிரம்பிய நாடு, இன்று வடநாட்டுடன் இணைக்கப்பட்டு, இப்படி வதைபடுவது நியாயமா? இந்த இணைப்பிலிருந்து விடுபட்டு, தனித்து நின்று, தனி அரசு நடத்தி, நாட்டுவளத்தைப்பெருக்கி அந்த வளம் நாட்டு மக்களுக்கே பயன்படும்படி செய்வது குற்றமா? அதற்கு, திராவிட நாடு திராவிடர்க்கே என்பதன்றி வேறென்ன திட்டம் இருக்கமுடியும்? இருந்தால் கூறுங்கள்.!

கப்பல் தட்டிலே நின்றுகொண்டு வளமிகுந்த என் தாய்நாட்டிலே என் வாழ்வுக்குப் போதுமான வழி கிடைக்காததால், இதோ நான், மலேயா போகிறேன்; கண் காணாச் சீமை; நாட்டிலே வேலை செய்யப் போகிறேன்; தாயைப் பிரிந்துபோகிறேன்; தாய்நாட்டிலிருந்து வறுமை என்னைத் துரத்துகிறது; வெளிநாடு செல்கிறேன் கூலியாக; என்று ஏக்கத்துடன் கூறி, தமிழன் சிந்திய கண்ணீர்கொண்டு எழுதப்பட்ட இலட்சியம்.

திராவிடநாடு திராவிடருக்கே என்பது.

—தி. ந.

இந்தியா சப்ளை மந்திரி

சென்னையில் சுற்றுப்பிரயாணம் செய்வார்

சென்னை, டிச. 16—

இந்திய அரசாங்கக் கைத்தொழில், சப்ளை இலக்கா அமைச்சர் தோழர் ஹரிகிருஷ்ண மெஹ்தாப் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் சுமார் 2 வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்யத் திட்டமிட்டுள்ளனர். டிசம்பர் 30-ந் தேதியன்று இவர் சென்னைவந்து 3 நாட்கள் தங்குவார். டெக்னலஜி இன்ஸ்டிடியூட்டைப் பார்வையிடுவார். பிறகு மஹாபலிபுரம் போவார். ஜனவரி 2-ந் தேதி விமானம் மூலம் திருச்சி செல்வார். பிறகு மதுரை செல்வார். ஜனவரி 6-ந் தேதி கோவை செல்கிறார். பின் ஜனவரி 12-ந் தேதி பெங்களூர் செல்வார்.

கொல்லாமல் கொல்வதா?

15-12-50 அன்று கைத்தறி நெசவாளர்தோழர்களும் மற்றும் பொது மக்களும் கொண்ட சுமார் 200 பேர் தென்காசி கூட்டுறவு சங்கம் கொடுத்தரேஷனைப்பகிஷ்கரித்தனர். ஒருவரையும் ரேஷன் (வாங்கவில்லை)வாங்கவிடவுமில்லை,காரணம் 3 அவுன்ஸ்ரேஷன் 3 நாட்களுக்குக் கொடுக்கப்படுவதே. நெல் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக 10 யூனிட் குப்பனுக்கு 2½ படி நெல் அதாவது 1¼ படி அரிசி, இது எத்தனை நாட்களுக்குக் காணும்? பாக்கி நாள் அவன் என்ன செய்வான்? 1¼ படி அரிசியை எத்தனை பேர் சாப்பிடலாம்? ஒரு நாளைக்குக்கூட காணாது. மக்கள் கதறுகின்றனர். மந்திரி மகிழ்கிறார் உங்களுக்காகவே செய்கிறோம் என்கிறார் எதை? கொல்லாமல் கொல்வதையா?

தி. மு. கழக பொதுக் கூட்டம்

19—12—50

தூத்துக்குடி

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

திராவிட மாணவிகள் முன்னேற்றக் கழகம்

செயங்கொண்டசோழபுரம்

செயங்கொண்டத்தைச் சேர்ந்த மேலக்குடியிருப்புதோழர் சி.கமலம் இல்லத்தில் 12-12-50ந்தேதி மாலை 3 மணிக்கு சு. மங்கையர்க்கரசி தலைமையில் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கீழ்க்கண்ட நிர்வாகக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்:-சி. கமலம். துணைச் செயலாளர்-சு. மங்கையர்க்கரசி பொருட்காப்பாளர்-அ. மேரி செல்வி. விளம்பர உறுப்பினர்-... எழிலரசி. மற்றும் சிலரை கொண்ட நிர்வாகக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் நிறைவேறிய தீர்மானங்கள்:—

1. அறிஞர் அண்ணாவின் வழியைப் பின்பற்றி நடப்பது.

2. நாரணமங்கலத்தில் பேச்சுரிமையைக் காக்க 144ஐ மீறி சிறை சென்ற தன்மானத்தொண்டர்களைப் பாராட்டுவதோடு,ஆளவந்த ஆட்சியினரின் போக்கை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

3. "ஆரியமாயை" புத்தகம் எழுதியதால் அறிஞர் அண்ணாத்துரை அபராதம் கட்ட மறுத்துச் சிறை சென்று திரும்பியபிறகு அண்ணாவின் மீது சப்திவாரண்டு செய்து 'திராவிடநாடு' அலுவலகத்திலிருந்து நாலு பேல் பேப்பர்களைப் பறிமுதல் செய்த அரசாங்கத்தின் கொடுஞ்செயலை வன்மையாகக் கண்டிக்கிறது.

வீட்டை ஆக்ரமித்துக் கொண்டதற்கு சிறைதண்டனை

ராவல்பிண்டி, டிச. 17—

ஒரு முஸ்லிம் அல்லாத அகதியின் வீட்டில் ஆக்கிரமித்து குடியேறிய அப்துல்கானி என்பவருக்கு ராவல்பிண்டி மாஜிஸ்டிரேட் மூன்று மாதச் சிறைதண்டனை விதித்திருக்கிறார்.

இந்திய சாது உண்ணவிரதம்

சிங்கப்பூர், டிச. 17—

மலேயாவில் வசிக்கும் ராமஸ்வாமி என்ற பெயருள்ள இந்திய சாது இரண்டு மாதத்திற்குள் இரண்டாது தடவையாக உண்ணவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார்.

மலேயா இந்தியரிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே அவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இவர் தண்ணீர்கூட அருந்தாமல் சென்ற 13 நாட்களாக உபவாசம் இருந்து வருகிறார். தினம் இருவேளையும் பிரார்த்தனை செய்கிறார்.

பிராமணாள் எடுபட்டது

கிரனூர், டிச. 15—

இவ்வூர் கழகத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பார்ப்பனர், தம்உணவுக்கடைபலகையிலுள்ள 'பிராமணாள்' என்ற பதத்தை எடுத்துவிட்டனர். இன்னும் இவ்வூரிலுள்ள மற்ற ஜாதியைக் குறிக்கும் சொற்களை எடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டுள்ளனர் அவ்வக் கடைச் சொந்தக்காரர்கள்.

பொதுப் பணிக்குப் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசையால் பல வீட்டுச் சொந்தக்காரர்கள் சிறிதளவு இடத்தையும் அறைகளாக "வகுத்து, வெளிச்சமோ, காற்றோ அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் வாடகைக்கு விடுவதும், சென்னையில் இருக்கவேண்டிய அவசியமுடையோர் வேறு வழியின்றி அக்குகைகளில் வாழுவதுமான நிலையை அரசாங்கமும் சென்னை நகரசபையும் விட்டுக்கொண்டுபோனால் நாட்டில் க்ஷயரோகம் பெருகாமல் வேறு என்ன ஆகும்?

மக்கள் வசிக்க இட அளவு, கக்கூஸ், தண்ணீர், காற்று, வெளிச்சம் முதலியவை சரியாக இருக்குமாறு கவனித்துக்கொள்ள அதிகார பீடத்திலிருப்போர் முன்வரவேண்டும்.

சென்னை நகரசபையில் சுகாதார இலாக்கா இருக்கிறது. சுகாதார அதிகாரி இருக்கிறார். அவ்விலாக்காவில் நகர சுகாதாரத்தைப் பாதுகாக்கும் வீரர்கள் பலர் இருக்கின்றனர். சென்னை அரசாங்கத்தில் சுகாதார மந்திரி இருக்கிறார். சுகாதார இலாக்கா இருக்கிறது. அதிகாரிகளும் பிற அலுவலாளர்களுமாகப் பலர் இருக்கின்றனர். இவ்வளவுபேருக்கும் அரசாங்கத்தின் மூலம் பொதுப்பணம் செலவாவதைத் தவிர உருவான பலன் ஒன்றையும் காணோம்.

சென்னையிலும் சரி பிற நம்நாட்டு நகரங்களிலும் சரி, ஏழை மக்கள் வசிக்கும் பகுதிகளில் பல வீடுகள் ஒரே குழாய் அல்லது இரண்டு குழாய்கள், ஒன்றிரண்டு கக்கூஸ்கள்; ஜன்னலேயில்லாத அறைகள் பத்து; ஒவ்வோரறையிலும் 10பேர் கொண்ட குடும்பம் குடியிருத்தல் இவ்வாறாகவே இருக்கின்றன. இவற்றைக் கவனிக்க இந்தச் சுகாதார இலாக்காக்களுக்கு நேரமில்லை எனவேதான் நாட்டிலே க்ஷயரோகம் பெருகுகிறது. சமயங்களில் தொத்துநோய்களும் பரவுகின்றன. சுகாதார இலாக்காக்காரர்கள் தீவிர முயற்சி எடுத்து இக்கேடுகளை நீக்குமாறு செய்ய வேண்டியது சுகாதார மந்திரியின் கடமை.

மக்கள் சென்னையிலும், வேறு பல நகரங்களிலும் நெருங்கி வாழாதபடி செய்ய, அரசாங்க நிர்வாகப் பணிமனைகளை நகரப் பகுதிகளிலிருந்து மாற்றிக்கொள்ள வேண்டும். தொழிற்சாலைகளை நகரத்தையொட்டியுள்ள கிராமப்புறங்களுக்கு மாற்ற வேண்டும். வீடுகள் காற்று வெளிச்சமற்றிருப்பின், அவற்றைச் சீர்திருத்தி விட்டு வீட்டுக்காரர்களிடமிருந்து அதற்கான செலவுத் தொகையை வசூலிக்க வேண்டும். இவ்வளவு பரப்புடைய வீட்டில் இத்தனை குடிகளுக்குமேல் வைக்கக் கூடாது என்று தடை இருக்கவேண்டும். இவற்றை அரசாங்கம் செய்ய முன்வருதல் வேண்டும்.

இவை தவிர, நகரப் புறங்களில் சென்னைநகரசபையும் பிற முனிசிபாலிட்டிகளும் வீடுகள் கட்டித் தரும் வேலையை மேற்கொள்ள வேண்டும். இதற்கெல்லாம் பணமில்லையென்றால், மடங்களிலும் கோவில்களிலுமிருக்கும் பணத்தை அரசாங்கம் எடுத்துச் செலவு செய்தல்வேண்டும். இவ்வாறான வீடுகள், வருவாய்க்குரிய இனங்களேயாகுமாதலின் அரசாங்கம் இதிற்கு செலவிடுவது முடங்கிவிடும் மூலதனம் என்று கருதுவதற்குக் கூட இடமில்லை. இவற்றை அரசாங்கம் கவனிக்குமா?

பிரிட்டனின் சிறந்த நண்பர்

லண்டன், டிச. 17—

பிரிட்டனின் சிறந்த நண்பர் என்று புகழப்பட்ட சர்தார் படேல் மறைவு குறித்து வருந்தியும், அவருடைய சேவையைப் பாராட்டியும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

காமன்வெல்தில் இந்தியா இருக்கவேண்டும் என்று தோழர் நேரு செய்த முடிவை சர்தார் படேல் ஆதரித்ததை இவை குறிப்பிட்டு இந்தியா பிரிட்டிஷ் உறவை பலப்படுத்திய சிறந்த நண்பர் என்று எழுதியிருக்கின்றன.

லண்டன் டவரில் உள்ள வைரங்கள்

லண்டன், டிச. 17—

லண்டன் டவருக்கு விஜயம் செய்பவர்கள் 5 கோடி பவுன் மதிப்புள்ள வைரங்களைப் பார்வையிட முடியும்.

இந்த வைரங்கள் ஒரு கண்ணாடி பெட்டிக்குள்வைக்கப்பட்டிருக்கும். இந்த வைரத்தை நாடுபவர்கள் கண்ணாடி பெட்டியில் கைவைக்க ஆரம்பித்தால் இதில் இருக்கும் எலெக்டிரானிக் அலாரம் வீறிட்டு அறிவிக்குமாம்.

புதுரக விமானம்

லண்டன், டிச. 17—

பிரிட்டனில் புதுரக விமானப் பாதுகாப்பு குகைகள் கட்டப்படும் என்று தெரியவருகிறது. ஏற்கனவே உள்ளவைகளும் பழுது பார்க்கப்பட்டு சீர்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க பிரிட்டிஷ் கப்பல்களைப் பகிஷ்கரிக்கவும்

இலங்கை துறைமுகத் தொழிலாளர் தீர்ப்பு

கொழும்பு, டிச. 14—

14-ந் தேதி நடந்த கொழும்பு துறைமுகத் தொழிலாளர் மாநாட்டில், "கொரியாவுக்கு ஆயுதம், துருப்பு, பண்டங்கள் ஏற்றிச் செல்லும் அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் தங்கிச் செல்கின்றன. அவைகளை கொரிய மக்களுக்கு எதிராக உபயோகிப்பதால் இலங்கை துறைமுகத் தொழிலாளர் பகிஷ்கரிக்க வேண்டுமெனவும், அதாவது பொருள்களை ஏற்றவோ இறக்கவோ கூடாதெனக் கேட்டுக்கொள்ளப்படும் கூட்டறிக்கை ஒன்று வெளியிட வேண்டும்" என ஒரு தீர்மானம் நிறைவேறியது.

'மாலை மணி' பொங்கல் மலர்

அறிஞர் அண்ணா, தமிழ்ப்பெரியார் திரு. வி. க, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மு. கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன், வியாழன், சிற்றரசு, ஈ. வே. கி. சம்பத், கா. அப்பாதுரை, சோமசுந்தர பாரதியார், அரங்கண்ணல், இராதாமணாளன், மற்றும் பிற அறிஞர்களின் அரிய கட்டுரை, கவிதைகளுடன் வெளிவருகிறது.

விலை அணா 4 தான்

வெளியூர்த் தோழர்கள் முன்னதாக ஏஜெண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும்.

விளம்பரம் செய்வோர், அலுவலக நிர்வாகிக்கு எழுதி விவரம் தெரிந்துகொள்ளவும்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

டிசம்பர் 29, 30 (வெள்ளி, சனி) தேதிகளில், நாகர்கோவிலிலுள்ள கிருட்டினன்கோயில், ஆங்கிலப் பாடசாலை சமீபமுள்ள, தியாகராயர் பந்தலில் நாஞ்சில் மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு வெகு சிறப்பாக நடைபெறும்.

மாநாட்டுப்பந்தல் வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்ற வண்ணமுள்ளன. பந்தலின் முகப்பை அண்ணாவின் முழு உருவ நீளப் படம் அலங்கரிக்கும்.

வெளியூர் தோழர்களுக்கு, நாகர் கோயில்—திருநெல்வேலி, திருவனந்தபுரம்—நாகர்கோவில், கூடுதல் பஸ் போக்குவரத்திற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. உணவு விஷயமாக நாஞ்சில் மாவட்டத்தைப் பொறுத்தவரை, உணவு விடுதிகள் ஏராளமுண்டு. வெளியூர் தோழர்கள் நாகர்கோவில் பஸ்நிற்குமிடத்தில் வந்து இறங்கியதும், மாநாட்டு இடத்திற்கு அழைத்துச் செல்லத் தொண்டர்கள் நிற்பார்கள்.

மாநாட்டில் பெண்களுக்கு சகல வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

கேரளக் கரையோரத்தில் நடக்கும் மாநாடு இது. திராவிடத்தின் தென்னோரம், நீலத்திரைகடலோரம் அதைப் பார்த்து மகிழ இது ஓர் வாய்ப்பு! இயற்கை எழில் மிகுந்த அற்புதக்காட்சி காணத் தோழர்களை அழைக்கிறோம்! கேரளத்தில் கட்சி உருவாகிறது! அதைக் கண்டு நம்பிக்கை கொள்ள ஓர் வாய்ப்பு! வாய்ப்பை நழுவவிடாமல், தோழர்கள் திரள் திரளாக குழும, அத்தனை பேரையும் கேட்டுக்கொள்கிறோம். மற்றைய விவரங்கள் தொடர்ந்து வெளிவரும். நாஞ்சில் மாவட்டத்தில் உள்ள சிற்றூர் பேரூர்களில் எல்லாம் டிக்கட் விற்பனைக்காகத் தோழர்கள் வருகிறார்கள். தயவு செய்து ரூபாய் கொடுத்து அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

கி. மனோகரன்,
வை. சுப்பிரமணியம்,
சி. சுப்பிரமணியம்.
(விளம்பர உறுப்பினர்கள்)

கோவிலில் கள்ளச் சாராயம்

காக்கிநாடா பீமேஸ்வரசாமி கோவிலில் கள்ளச்சாராயம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, கோவில் காவலனும் கோவிலைச்சேர்ந்த மற்றுமிருவரும் குடித்திருந்த நிலையில் போலீசாரால் கைது செய்யப்பட்டார்கள்.

கழகத் தோழர்களுக்கு!

திராவிட முன்னேற்ற கழக நிகழ்ச்சிகளையும், ஆங்காங்கு நடைபெறும் கழக கூட்டங்களின் விவரங்களையும் உடனுக்குடன் "மாலை மணி" அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். — ஆசிரியர்

தேவை

"மாலை மணி" விற்பனை செய்ய கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

ஈரோடு
மாயவரம்
வேலூர்
திருவண்ணாமலை

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி சென்னை—1.

சந்தா விவரம்

1. ஆண்டு ரூ. 12—8—0
6. திங்கள் ரூ. 7—0—0
3. திங்கள் ரூ. 3—8—0

தனிப்பிரதி அரையணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.